பேர் வருகிறார்கள். அப்படி இதிலே ஊக்கம் காட்டப்படவில்லை. இதிலே அதிகமான வருமானத்தைப் பெற முடியாது என்ற எண்ணம் இயல்பாக இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனில் இருந்து சானடோரியத்திற்கு உதவித் தொகை கொடுக்கப் படுகிறது. பெருந்துறை ராமலிங்கம் சானடோரியத்திற்கு ஒவ் வொரு இ.எஸ்.ஐ. ஒர்க்கருக்கும் 6 ரூபாய் வீதந்தான் கொடுக்கப் படுகிறது. இது பத்து வருஷத்திற்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்ட தொகை. இப்போது 13 ரூபாய் செலவாகிறது. நம்முடைய மாநிலத்தில் அதிகப்படியான நோயாளிகளைச் சீக்கிரம் குணப் படுத்துகிற ஆஸ்பத்திரியாக இருப்பதால் அந்த உதவித் தொகை யைக் கூட்டிக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அது ஒன்று மட்டுமல்ல ; பெருந்துறையில் இருக்கிறது ; செங்கிப்பட்டியில் இருக்கிறது ; தாம்பரத்தில் இருக்கிறது ; கப்பலூரில் (ஆஸ்டின்பட்டி என்று பெயர்) இருக்கிறது ; நாகர்கோயில் பகுதியில் இருக்கிறது ; தேவ கோட்டை பக்கத்தில் இருக்கிறது. பெருந்துறை பெயர் பெற்ற காரணம் பெருந்துறை என்ற பெயர் இருப்பதுதான். அது கோவை மாவட்டத்தில் இருப்பதுதான். தரப்படுகிற உதவித் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்றால் தனியாக இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனுக்கு எழுத வேண்டும். தமிழக அரசு இதிலே செய் வதற்கு ஒன்றுமில்லை.

Petrol consumption charges

* 841 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the total amount due from the Central Government to the State Government towards petrol consumption during the last two years; and

(*b*) whether it is a fact that there is inordinate delay on the part of the Central Government in allocating this amount?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) 1971-72, 1972-73 ஆண்டுகளுக்கு ரூபாய் 1,65,29,286.26.

(இ) இல்லை.

1974 ஏப்ரல் 17]

திரு. ஆ. பரந்தாமன்: தமிழ்நாட்டில் பயன்படுத்துகிற பெட்ரோலுக்கு மத்திய அரசு ஒரு வரி வசூலிக்கிறார்கள். அதிலே 70 சதவிகிதத்தை அந்தந்த மாநிலங்களுக்குத் தந்துவிட வேண்டும். 30 சதவிகிதத்தை ரிசர்வ் ஃபண்டில் வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி நமக்கு ஒரு கோடி சொச்சம் ரூபாய் வரவேண்டியிருக்கிறது. 70 சதவிகிதம் திருப்பித் தருவதில் காலதாமதம் ஏற்படுகிறது; 30 சதவிகிதம் ரிசர்வ் பண்டை வைத்துக்கொண்டு அந்தந்த மாநிலங்களில் அவ்வப் போது தேவைக்கேற்ப நிதியை ஒதுக்குகின்றார்கள். அது நம் மாநிலத்திற்குக் குறிப்பாக ஒதுக்கப்படவில்லை. போக்குவரத்துத் துறை மானிய விவாதத்தின்போது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதுபற்றி அவர்களோடு பேசினார்கள் என்று தெரிவித்தார்கள். மத்திய அரசை வற்புறுத்தி விரைவில் 70 சதவிகிதத்தைத் தருவதற்கும் ரிசர்வ் பண்ட் தொகையை முழுவதும் தமிழ்நாட்டுக்கு ஒதுக்குவதற்கும் நம்முடைய அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 70-30 அல்ல, 80-20. 20 சதவிகிதம் ரிசர்வ் பண்ட். 80 சதவிகிதத்தை மாநிலத்திற்குக் கொடுத்து விடுகிறார்கள். பணத்தை ஒதுக்குவதில் காலதாமதம் இருப்பதாகத் தகவல் இல்லை; காலதாமதம் இல்லை. ரிசர்வ் பண்ட் எது எதற்கு ஒதுக்கப்பட வேண்டுமென்பது பற்றி மத்திய அரசு கூட்டும் மாநாட்டில் கலந்து கொள்ளும்போது விரிவாகப் பேசப் படும்.

Overbridge near Pachakuppam

* 842 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is a proposal under the consideration of the Government to construct an overbridge on Madras–Bangalore Railway line near Pachakuppam level crossing; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) இப்பணி நான்காவது திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.